**UNIVERSITY OF PERADENIYA**

**CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION**

**ශාස්ත්‍රවේදී උපාධි (බාහිර - නව නිර්දේශය-පරීක්ෂණය 300 මට්ටම - පෙබරවාරි 2022**
**கலைத்தேர்வுப் பரீட்சை (வெளிவாரி-புதிய பாடத்திட்டம்) 300 வது தேர்ச்சி மட்டம் – பெப்ரவரி 2022**
**Bachelor of Arts (External - New Syllabus) Examination 300 Level – February - 2022**

**(ECNE 301: Sri Lankan Economy)**

කාලය පැය (03) තුනයි
மூன்று (03) மணித்தியாலங்கள்
Time three **(03)** Hours.

නොපැහැදිලි අත් අකුරුවලට ලකුණු කපනු ලැබේ
எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.
Marks will be deducted for illegible hand writing.

ඕනෑම ප්‍රශ්න 05 කට පිළිතුරු සපයන්නග
05 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.
Answer any 05 questions only.

මෙම ප්‍රශ්න පත්‍රයේ අඩංගු ප්‍රශ්න සංඛ්‍යාව 10 කි
இந்த வினாப்பத்திரத்தில் 10 வினாக்கள் உள்ளன.
There are 10 questions in the question paper.

---

1. i. பொருளாதார வளர்ச்சியின் பிரதான மூலங்கள் யாவை? 05 புள்ளிகள்)

   ii. பொருத்தமான குறிகாட்டிகளைப் பயன்படுத்தி, இலங்கையில், சுதந்திரத்திற்குப் பிற்பட்ட காலப்பகுதியில் பொருளாதாரக் கொள்கைத் தீர்மானங்களை மேற்கொள்கின்ற நடைமுறையில் அவதானிக்கப்படக்கூடிய பிரதான குறைபாடுகளை ஆராய்வதுடன் அக்குறைபாடுகளை நீக்குவதற்கு அவசியமான நடவடிக்கைகள் குறித்தும் ஆராய்க. (15 புள்ளிகள்)

2. i. இலங்கையில் குடித்தொகை நிலைமாற்றத்தின் பல்வேறு கட்டங்களைச் சுருக்கமாக அடையாளம் செய்க. (05 புள்ளிகள்)

   ii. 1960 களில் இருந்து இலங்கையின் குடித்தொகை வளர்ச்சி வீதம் வீழ்ச்சியடைவதற்குப் பங்களிப்புச் செய்துள்ள பிரதான சமூக, பொருளாதாரக் காரணிகள் யாவை? (05 புள்ளிகள்)

   iii. இந்நாட்டின் பொருளாதார அபிவிருத்தியின்மீது வயது அதிகரிக்கும் (முதியோர்) குடித்தொகையின் பொருளாதாரத் தாக்க விளைவுகளை ஆராய்க. (10 புள்ளிகள்)

3. i. இலங்கையில் வறுமையின் பிரதான பண்புகளை விபரிக்குக. (05 புள்ளிகள்)

   ii. 1970 களில் இருந்து இலங்கையில் அமுல்படுத்தப்பட்டு வந்துள்ள வறுமை ஒழிப்புச் செயற்திட்டங்களின் செயலாற்றத்தினை நுணுக்கமாக மதிப்பிடுக. இலங்கையில் வறுமையினைக் குறைப்பதற்கு, தற்போது நடைமுறையில் இருந்துவரும் வறுமை ஒழிப்புச் செயற்திட்டங்களில் எத்தகைய சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என நீர் சிபார்சு செய்வீர்?. (15 புள்ளிகள்)

4. i. இறைக் கொள்கை, நாணயக் கொள்கை ஆகியவற்றினை வேறுபடுத்துக. (05 புள்ளிகள்)

   ii. சந்தைப் பொருளாதாரம் ஒன்றில், அரசாங்கத்தின் வகிபாகம் குறித்து ஆராய்க. (05 புள்ளிகள்)

   iii. இலங்கையின் இறை முகாமைத்துவத்தின் பிரதான பொருளாதார அம்சங்கள் குறித்தும், அரசாங்கச் செலவீடுகளை நிதியீட்டம் செய்வதற்கு மிகவும் உயர்வான மட்டங்களில் பொதுப்படு கடன்களை நாடுவதின் விளைவுகள் குறித்தும் ஆராய்க. (10 புள்ளிகள்)

5. i. இலங்கை மத்திய வங்கியின் பிரதான தொழிற்பாடுகள் யாவை? (05 புள்ளிகள்)

   ii. பணவீக்கம் ஏற்படுத்தக்கூடிய பாதக விளைவுகளை விளக்குக. (05 புள்ளிகள்)

   iii. பணவீக்கம் வேலையின்மை ஆகியவற்றிற்கு இடையிலான சாத்தியமான அனுபவரீதியான தொடர்பினை ஆராய்க. (05 புள்ளிகள்)

   iv. “மக்கள் பணவீக்கத்தினால் அனுபவிக்கும் துன்பத்தினைவிடவும் கூடுதலான துன்பங்களை வேலையின்மை காரணமாக அனுபவிக்கின்றனர்.” இக்கூற்றுடன் நீர் உடன்படுவீரா? உமது விடைக்கான காரணங்களை விளக்குக. (05 புள்ளிகள்)

6. i. இலங்கையில் பின்பற்றப்படுகின்ற விவசாயக் கொள்கையின் பிரதான நோக்கங்கள் யாவை? (05 புள்ளிகள்)

ii. உணவுப் பாதுகாப்பு என்பதன் மூலம் நீர் விளங்கிக்கொள்வது யாது? இலங்கையில் உணவுப் பாதுகாப்பினை ஏற்படுத்துவதில் எதிர்கொள்ளப்படுகின்ற பிரதான சவால்கள் குறித்து ஆராய்க. (05 புள்ளிகள்)

iii. இலங்கையின் விவசாயத்துறையில் காணப்படுகின்ற பிரதான பிரச்சினைகளை சுருக்கமாக அடையாளம் செய்வதுடன் இப்பிரச்சினையினைத் தீர்ப்பதற்காக சமீப காலங்களில் இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு வரும் கொள்கை நடவடிக்கைகளின் தாக்கங்களையும் நுணுக்கமாக மதிப்பிடுக. (10 புள்ளிகள்)

7. i. இலங்கையின் பேரினப்-பொருளாதாரத்தின்மீது பாதீட்டுப் பற்றாக்குறைகள் ஏற்படுத்துகின்ற தாக்க விளைவுகளைச் சுருக்கமாக ஆராய்க. (07 புள்ளிகள்)

ii. இலங்கையின் பாதீட்டுப் பற்றாக்குறைகளை நிதியீட்டம் செய்வதற்கு அரசாங்க வருமானம் போதிய அளவில் காணப்படாமைக்கான காரணங்களைக் குறிப்பிடுக. (07 புள்ளிகள்)

iii. இலங்கையில் அரசாங்கச் செலவீடுகள் தொடர்ச்சியாக அதிகரித்து வருவதற்கான காரணங்கள் யாவை? (06 புள்ளிகள்)

8. மூளைசாலிகள் வெளியேற்றம், ஊழியத்தின் ‘கீழ்உழைப்பு’ நிலைமை என்பன இலங்கையின் ஊழியச் சந்தையின் உறுதித்தன்மை, அதன் புத்தாக்க எதிர்காலம் ஆகியவற்றினை மோசமாகப் பாதிப்படையச் செய்கின்றன. இலங்கையின் சமகால இளைஞர் வேலையின்மை நிலைமையுடன் தொடர்புபடுத்தி இக்கூற்றினை நுணுக்கமாகப் பரிசீலனை செய்க. (20 புள்ளிகள்)

9. i. இலங்கையின் சென்மதி நிலுவைக் கணக்கின் ஒரு கூறான நடைமுறைக் கணக்கானது வழமையாகவே ஏன் பற்றாக்குறையினைக் கொண்டிருந்து வருகின்றது என்பதனை ஆராய்க. (08 புள்ளிகள்)

ii. இலங்கையின் வர்த்தக நிலுவையினை விளக்குவதில் பின்வரும் கொள்கைக் கருவிகள் எவ்வகையில் முக்கியத்துவம் கொண்டவை? வெளிவாரி நிதியிடல் தொடர்பாக தற்போதையப் பொருளாதாரப் பிரச்சினைகளைக் கவனத்தில் கொண்டு இவை குறித்து கொள்கைப் பரிந்துரைகளையும் நியாயப்படுத்தல்களையும் மேற்கொள்க.

(அ) நாணய மாற்று வீதத்தின் முகாமைத்துவம்
(ஆ) ஏற்றுமதிகளின் பன்முகப்படுத்தல்
(இ) இறக்குமதிமீதான இறுப்புக் கொள்கை

(12 புள்ளிகள்)

10. உற்பத்தி, வருமானம், ஊழியச் சந்தை, பொதுநிதி ஆகியவற்றின் அடிப்படையில் இலங்கையின் பொருளாதாரத்தின்மீது கொவிட்-19 பெருந்தொற்று ஏற்படுத்தியுள்ள தாக்க விளைவுகளைப் பரிசீலனை செய்து மதிப்பிடுக. (20 புள்ளிகள்)

****************************************